**அரநாயக்க பிரதேச சபை**
**கேகாலை மாவட்டம்**

---

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2016 மார்ச் 31 ஆந் திகதியன்றும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2015 மார்ச் 31 ஆந் திகதியன்றும் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 யூன் 28 ஆந் திகதியன்று சபையின் செயலாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

இவ்வறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களினாலான தாக்கங்களைத் தவிர, நிதிக்கூற்றுக்களில் 2015 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான அரநாயக்க பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவுற்ற ஆண்டிற்கான அதன் நிதிச் செயற்பாடு மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு ஏற்ப உண்மையானதும் நியாயபூர்வமானதுமான நிலைமையைத் தோற்றுவிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

(அ) நன்கொடையாக நூலகத்திற்கு வழங்கப்பட்ட புத்தகங்களது பெறுமதியாகிய ரூபா 76,912 மூலதன உதவியின் கீழ் கணக்கிலிடப்படாது மீண்டுவரும் உதவியாகக் கணக்கிலிடப்பட்டமையால் மீண்டுவரும் வருவாய் அதேயளவு அதிகரித்தும் மூலதன வருவாய் அதேயளவு குறைத்தும் காட்டப்பட்டிருந்தன.

(ஆ) மீளாய்வாண்டின் பொருட்டுப் பெறப்பட்ட வட்டி வருவாயாகிய ரூபா 78,808 ஏனைய வருவாயின் கீழ் கணக்கிலிடப்படாது திரண்ட நிதியத்தில் செலவு வைக்கப்பட்டமையால் ஆண்டிற்கான மிகை அதேயளவு குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

(இ) மூலதனச் செலவினத்தின் கீழ் காட்டப்பட வேண்டிய ரூபா 62,000 பெறுமதியான பல வேலைகளைச் செய்யவல்ல பிரொஜக்டர் மற்றும் ரூபா 23,000 பெறுமதியான அலுமனியத்திலான ஏணி என்பவற்றினது மொத்தப் பெறுமதியாகிய ரூபா 85,375 மீண்டுவருஞ் செலவினமாகக் கணக்கிலிடப்பட்டிருந்தது.

(ஈ) மாகாண சபை நிதியேற்பாட்டின் மூலம் மீளாய்வாண்டில் அமுலாக்கப்பட்ட 108 வேலைகளுக்குரிய மூலதன உதவி மற்றும் மூலதனச் செலவினம் ரூபா 23,303,433 ஆகும். எனினும், அது ரூபா 237.904,234 ஆகக் கணக்கிலிடப்பட்டமையால் மீளாய்வாண்டினது மூலதன உதவி மற்றும் மூலதனச் செலவினம் ஒவ்வொன்றும் முறையே ரூபா 214,600,801 அதிகரிக்கப்பட்டு நிதி மற்றும் செயற்பாட்டுக் கூற்றிலும் காசுப் பாய்ச்சல் கூற்றிலும் காட்டப்பட்டிருந்தன.

### 1.3.2 கணக்கிணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டு முடிவில் 02 கணக்கீட்டு விடயங்களது மீதிகளின் கூட்டுத் தொகை ரூபா 7,469,365 ஆகவிருந்தது. அவற்றுடனொத்த உப பதிவேடுகள்/ அறிக்கைகளின் பிரகாரம் கணக்குகளது மீதிகளின் கூட்டுத் தொகை ரூபா 6,448,692 ஆகவிருந்தது. இதனால் ஏற்பட்ட வித்தியாசம் ரூபா 1,020,673 ஆகும்.

### 1.3.3 தொங்கற் கணக்கு

முன்கொண்டு வரப்பட்டவாறிருக்கும் 12 ஆண்டுகளுக்குரிய தொங்கற் கணக்கு செலவு மீதியான ரூபா 672,333 மீளாய்வாண்டின்போதும் தீர்த்து வைக்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

### 1.3.4 பெற வேண்டிய மற்றும் கொடுப்பனவு செய்ய வேண்டிய கணக்குகள்

**(அ) பெற வேண்டிய கணக்குகள்**

2015 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு 01 ஆண்டைக் கடந்திருந்த பெற வேண்டிய கணக்கு மீதிகளது பெறுமதி ரூபா 451,478 ஆகும்.

**(ஆ) கொடுப்பனவு செய்ய வேண்டிய கணக்குகள்**

2015 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு 01 ஆண்டைக் கடந்திருந்த கடன் கொடுத்தோர் ரூபா 42,215 ஆகும்.

### 1.3.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமை

கீழே காணப்படும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமை கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்டது.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) சபரகமுவ மாகாண சபையின் நிதிசார் விதிக் கோவை | |
| 261.2.7 | 1999 ஜூலை தொடக்கம் 2000 சனவரி வரை 06 சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்ட ரூபா 44,483 கட்டு நிதியானது 2016 ஏப்ரல் 02 ஆந் திகதியில் உள்ளவாறு தீர்த்து வைக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) சபரகமுவ மாகாண சபையின் தலைமை அமைச்சுச் செயலாளரது 2010 நவெம்பர் 16 ஆந் திகதிய சீஎம்/ஏடீ/20/03 ஆம் இலக்கச் சுற்றறிக்கை | கனிஷ்ட ஊழியர்களாகப் பதவி ஏற்றுள்ள சகல ஊழியர்களும் நியமிக்கப்பட்ட பதவிகளிலேயே பணியில் அமர்த்தப்பட வேண்டும். எனினும், அதற்கு முரணாக சபையின் தொழிலாளர் பதவிகளில் நியமிக்கப்பட்ட 10 பேர் வேறு பணிகளில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். |

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிப் பெறுபேறுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிசார் கூற்றுக்களின் பிரகாரம், 2015 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான சபையின் மீண்டுவருஞ் செலவினத்திலும் கூடிய வருவாய் ரூபா 9,930,291 ஆகும். இதற்கொப்பான முன்னைய ஆண்டின் மீண்டுவருஞ் செலவினத்திலும் கூடிய வருவாய் ரூபா 4,537,109 ஆகும். இதனால் மீளாய்வாண்டிற்கான நிதிப் பெறுபேறுகளில் ரூபா 5,393,182 அதிகரிப்பு தென்படுகின்றது.

### 2.2 பகுப்பாய்வுடனான நிதிசார் மீளாய்வு

நிதிப் பெறுபேற்றின் ரூபா 5,393,182 அதிகரிப்பிற்கு 04 வருவாய் விடயங்களது அதிகரிப்பும் 05 செலவின விடயங்களது குறைவும் பிரதான காரணிகளாகின.

### 2.3 வருவாய் நிர்வாகம்

#### 2.3.1 வருவாய்ச் சேகரிப்பிலான செயலாற்றல்

(அ) செயலாளரால் மீளாய்வாண்டிற்கெனச் சமர்ப்பிக்கப்பட்ட பட்டியலிடப்பட்ட வருவாய், உள்ளவாறான வருவாய் மற்றும் வருவாய் நிலுவை தொடர்பான தகவல்கள் வருமாறு.

| | வருவாயினது தோற்றுவாய் | 2015 சனவரி 01 இல் உள்ளவாறான நிலுவை | 2015 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிலுவையில் அறவீடு | 2015 ஆம் ஆண்டிற்கான பட்டியல் தொகை | ஆண்டிற்கான பட்டியலில் அறவீடு | 2015 சனவரி 01 இல் உள்ளவாறான நிலுவை மீதி | ஆண்டிற்கான பட்டியலிடப்பட்ட தொகையில் நிலுவை | மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | தீர்வையும் வரியும் | 1,028,540 | 613,121 | 2,380,546 | 1,975,912 | 415,419 | 404,634 | 820,053 |
| (ii) | குத்தகை வாடகை | 18,127 | 13,569 | 378,680 | 63,818 | 4,558 | 314,863 | 319,420 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | - | - | 151,175 | 149,875 | - | 1,300 | 1,300 |
| (iv) | பிற வருவாய் | 11,440,141 | 9,835,128 | 37,848,967 | 26,164,292 | 1,605,013 | 11,684,675 | 13,289,688 |

#### 2.3.2 நீதிமன்றத் தண்டப் பணமும் முத்திரைக் கட்டணமும்

மாகாண சபையின் தலைமைச் செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரிகளிடமிருந்தும் 2015 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு பெற வேண்டிய தொகை பின்வருவாறு.

| | | ரூபா |
|---|---|---|
| i. | நீதிமன்றத் தண்டப் பணம் | 777,437 |
| ii. | முத்திரைக் கட்டண வருவாய் | 9,921,609 |

**2.3.3 கடைகளது குத்தகை வாடகை**

திப்பிட்டிய பொதுச் சந்தைக் கூட்டுத் தொகுதியில் நடைபெறும் 03 இறைச்சிக் கடைகளதும் மீன் கடைகளதும் குத்தகையாளர்கள் 05 பேரிடமிருந்து 2000 முதல் 2014 வரை ரூபா 112,645 அறவிடப்பட வேண்டியிருந்தது. இதனை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 முகாமைத்துவ வினைத்திறமையின்மை**

(அ) திப்பிட்டிய நகரில் அமைந்துள்ள சபைக்குச் சொந்தமான காணிக் கூறுகளை வருடாந்தக் குத்தகை செலுத்தும் அடிப்படையில் பெற்றிருந்த நபர்கள் அவற்றில் அத்துமீறி மாடி வீடுகளையும் வர்த்தகக் கட்டிடங்களையும் நிர்மாணித்து அவற்றைக் குடியிருப்பதற்கும் வர்த்தக நோக்கங்களுக்கும் பயன்படுத்தியிருந்தனர். அச் சொத்துக்களை இனங்கண்டு குத்தகை உடன்படிக்கையினது நிபந்தனைகளின் பிரகாரம் குத்தகையாளர்களை அப்புறப்படுத்துவதற்கும் சொத்துக்களது தற்போதைய பெறுமதியின் அடிப்படையில் அவற்றைக் குத்தகைக்கு வழங்குவதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை.

(ஆ) மத்திய சந்தை வளவிலும் திப்பிட்டிய விளையாட்டு மைதான வளவிலும் அத்துமீறிய நிர்மாண வேலைகள் நடைபெறுவதாகத் தகவல்கள் கிடைத்திருந்தபோதும், அந்நிர்மாண வேலைகளைத் தடைசெய்வதற்கும் அத்துமீறிய குடியிருப்பாளரை அப்புறப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(இ) பிரதேச சபைகளை சக்திமிக்கதாக்கும் தேசிய நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 2014 யூன், யூலை, ஆகஸ்ட் மாதங்களில் ரூபா 3,000,000 தொகையில் 2015, டிசெம்பர் 31 ஆந் திகதியன்று செயற்திட்டத்ததை முடிவுறுத்துவதற்குத் தவறியமையால், 2015 ஆகஸ்ட் 19 ஆந் திகதியன்று உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சிற்கு ரூபா 1,107,440 திருப்பி அனுப்பப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின்போது பெறப்பட்ட தொகை ரூபா 1,000,000 ஆகும். இதில் ரூபா 641,281 ஆண்டின் இறுதியளவிலும் பயன்படுத்தப்படாதிருந்தது.

(ஈ) சபையின் தீர்மானத்திற்கமைய தலைவரது மாதாந்த எரிபொருள் வரம்பு 600 லீட்டராகும். அவ்வரம்பை மீறி 2014 ஆகஸ்டிலும் 205 சனவரியிலும் வழங்கப்பட்ட 83.73 லீட்டர் எரிபொருளுக்கு ரூபா 9,467 அறவிடப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

**3.2 செயற்பாட்டு வினைத்திறமையின்மை**

உடரட்ட அபிவிருத்தி அதிகாரசபையின் நிதியேற்பாட்டில் ரூபா 4,588,212 செலவழிக்கப்பட்டு நிர்மாணிக்கப்பட்ட பிரதேச சபையினது மயானத்தின் எரியூட்டும் பகுதியில் சடலம் ஒன்றை உட்புகுத்த முற்பட்ட சந்தர்ப்பத்தில் பெரிய ஓசையுடன் வெடிப்பு ஏற்பட்டு மயானத்தின் எரியூட்டும் பகுதி, முன் பக்கக் கதவு மற்றும் பின் கதவு ஆகியவற்றின் இருபக்கச் சுவர்களும் உடைந்தமையால் பழுதுபார்ப்பதற்காக இம் மயானத்தை நிர்மாணித்த கம்பனி ரூபா 1,353,300 மதிப்பீட்டைச் சமர்ப்பித்திருந்தது. மயானமானது இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபன லிமிட்டெட் நிறுவனத்தில் காப்புறுதி செய்யப்பட்டிருந்தமையால் காப்புறுதி இழப்பீட்டுக்கு விண்ணப்பிக்கப்பட்டிருந்தும் காப்புறுதி நிறுவனம் மேற்கொண்ட பரிசீலனைகளின் மூலம் முறைப்படி பராமரிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாததன் காரணமாகவே இவ்விழப்பு ஏற்பட்டதாகத் தீர்மானிக்கப்பட்டு காப்புறுதி இழப்பீட்டை வழங்குவது மறுக்கப்பட்டிருந்தது.

## 4. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 வரவு, செலவுத்திட்டக் கட்டுப்பாடு

(அ) மீளாய்வாண்டிற்கெனச் சமர்ப்பிக்கப்பட்ட வரவு, செலவுத் திட்டத்தில் நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த 04 செலவின விடயங்களுக்கான ரூபா 150,000 கூட்டுத் தொகையுடைய நிதியேற்பாட்டின் 100 சதவீதமும் 07 செலவின விடயங்களது ரூபா 504,722 கூட்டுத் தொகையுடைய நிதியேற்பாட்டில் 88 முதல் 95 சதவீதம் வரையும் என ரூபா 654,722 கூட்டுத் தொகையானது சபையினது நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) வருவாய்த் தலைப்பு 01 க்குரிய ரூபா 150,000 கூட்டுத் தொகையுடைய மதிப்பிடப்பட்ட வருவாய் முற்றாகவே சம்பாதிக்கப்படவில்லை.

(இ) வருவாய்த் தலைப்பு 05 க்குரிய மதிப்பிடப்பட்ட வருவாயினது 50 சதவீதத்துக்கும் 91 சதவீதத்துக்கும் இடையேயான ரூபா 94,470 கூட்டுத் தொகையுடைய வருவாயைச் சபை சம்பாதிக்கத் தவறியிருந்தது.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு அம்சங்களில் சபையின் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) உள்ளகக் கட்டுப்பாடு
(இ) வருவாய் நிர்வாகம்
(ஈ) வரவு, செலவுத் திட்டக் கட்டுப்பாடு